COVID-19 சோதனை

# உண்மைகளைப் பெறுக.

## COVID-19 சோதனை சமூகத்தைப் பாதுகாக்கிறது

நீர் தடுப்பூசி பெற்றிருந்தாலும் உமக்கு COVID-19 தொற்றவும் நீர் நோயுற்றதாக உணராமையால் அதை அறியாமலும் இருக்கலாம். நீர் சோதித்துக் கொள்ளும் போது நீர் உமது அன்புக்குரியோரையும் உமது சமூகத்தையும் உம்மையும் பாதுகாத்துக் கொள்கிறீர்.

ஆட்கள் தாம் தடுப்பூசி பெற்றுள்ளனரா என்பது எவ்வாறிருப்பினும் அவர்கள் நோயுற்றதாக உணர்கிறன்றனரா என்பது எவ்வாறிருப்பினும் அது எமது சமூகங்களை இன்னும் பாதுகாப்பாக்குகிறது என்பதால் சோதித்துக் கொள்கின்றனர். பெரியோர், சிறியோர், குழந்தைகள் ஆகியோர் உட்பட எவரும் சோதித்துக் கொள்ளலாம்.





## சோதித்துக் கொள்வது எப்போது

- உமக்கு நோயறிகுறிகள் இருந்தால்
- நோய் இருப்பதாகச் சோதித்தறியப்பட்ட எவருக்கு அருகிலும் நீர் நின்றிருந்தால்
- உமது பயணத்துக்கு முன்னரும் பின்னரும்
- நீர் பலருடன் உட்பகுதிகளில் ஒன்று கூடும் முன்னரும் பின்னரும்
- உமது பாடசாலையினாலோ வேலையிடத்தினாலோ வேண்டப்பட்டால்



## நோயறிகுறிகள்

- காய்ச்சல்
- இருமல்
- மூச்சிறுக்கம்
- அயர்வு (களைப்பு)
- தொண்டை கமறல்
- மூக்கு ஒழுகுதல் அல்லது நிறைந்திருத்தல்
- தசை வலி அல்லது உடல் வலிகள்
- தலைவலி
- வாந்தி அல்லது வயிற்றோட்டம்
- சுவை அல்லது மணம் இழப்பு

**COVID-19, சளிக்காய்ச்சல், தடுமல் என்பவற்றின் நோயறிகுறிகள் மிக ஒத்தவை என்பதால், உமக்கு COVID இருக்கிறதா என்றறிவதற்கான ஒரே வழி சோதித்துக் கொள்வதாகும்.**

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

1 Mar 2022

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus

# சோதித்துக் கொள்வது எங்கே

### பல இடங்கள் சோதிப்பை வழங்குகின்றன

நீர் ஒரு மருத்துவரின் அலுவலகத்தில், ஒரு சமூகச் சோதனைத் தளத்தில், வேலையிடத்தில், பாடசாலையில், அல்லது ஒரு மருந்தகத்தில் ஒரு சோதனையைப் பெற இயலுமாகலாம். பல மருந்தகங்களில் நீரே வீட்டிற் செய்து கொள்ளக் கூடிய சோதனைகளும் இருக்கின்றன.

### சோதிப்பு இரகசியம் பேணுவதாகும்

உமது குடிவரவு நிலை அல்லது உம்மிடம் மருத்துவக் காப்புறுதி அல்லது ஒரு அடையாள அட்டை இருக்கிறதா என்பது யாதாக இருப்பினும் நீர் ஒரு இரகசியம் பேணும் சோதனையைப் பெறலாம்.

# சோதனை விரைவானதும் பாதுகாப்பானதும் ஆகும்



### சோதிக்கப் பல வழிகள் உள்ளன

நீரோ ஒரு சுகாதாரப் பராமரிப்பு நிபுணரோ உமது மூக்கிலோ தொண்டையிலோ உமிழ் நீரிலோ இருந்து ஒரு மாதிரியைப் பெறலாம்.

சில சோதனைகளுக்குப் பணச் செலவாகும், மற்றையவை இலவசமாகக் கிடைக்கும். மேலும் தகவல்களுக்காக உமது சுகாதாரத் திணைக்களத்தைத் தொடர்பு கொள்க.

### நீர் முடிவுகளுக்காகக் காத்திருக்கும் போது

சில சோதனைகள் உமக்கு உடனடியாகவே முடிவுகளைத் தருகின்றன, ஏனைய சோதனைகளுக்கு ஒரு நாளோ பல நாட்களோ எடுக்கலாம்.

நீர் நோயுற்றதாக உணர்ந்தால் வீட்டில் இருத்தல், ஒரு முகமூடியை அணிதல், சமூக இடைவெளியைப் பழகுதல் என்பவற்றின் மூலம் மற்றவர்களைப் பாதுகாக்க.

### உமக்கு தொற்றிருப்பதாகச் சோதித்தறியப்பட்டால்

உமக்கு தொற்றிருப்பதாகச் சோதித்தறியப்பட்டால் அல்லது நீர் நோயுற்றிருப்பதாக உணரும் எந்நேரத்திலும் வேலைக்கோ பாடசாலைக்கோ சமூக நிகழ்வுகளுக்கோ செல்லாமல் வீட்டிலிருத்தல் என்பது நீர் உமது சமூகத்தைப் பாதுகாப்பதற்காகச் செய்யக் கூடிய ஆக முக்கியமான விடயங்களில் ஒன்றாகும்.

ஓய்வெடுத்தல், அதிக நீரருந்துதல், உமது நோயறிகுறிகள் மோசமடைந்தால் ஒரு மருத்துவரை அழைத்தல் என்பவற்றின் மூலம் உம்மைக் கவனித்துக் கொள்க.

### உமக்கு தொற்றவில்லையெனச் சோதித்தறியப்பட்டால்

ஒரு முகமூடியை அணிதல், சமூக இடைவெளியைப் பழகுதல், நீர் நோயுற்றதாக உணரும் போது வீட்டிலிருத்தல் என்பவற்றின் மூலம் உம்மைப் பாதுகாத்துக் கொள்வதைத் தொடர்க.

உமது நோயறிகுறிகள் அகன்று விடா விட்டால் மீண்டும் அல்லது நீர் உமது சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்வதைத் தொடர்வதை உறுதிப்படுத்த தேவைக்கேற்றவாறு அடிக்கடி சோதித்துக் கொள்க.

நீர் ஏற்கனவே தடுப்பூசி பெற்றிராவிட்டால் அல்லது உமது கூட்டியைப் பெற்றிராவிட்டால், நீர் குணமடைந்த பின்னர் ஒரு தடுப்பூசியைப் பெறலாம். நீர் எப்போது ஒரு தடுப்பூசியைப் பெறலாம் என்பதைப் பற்றி உமது மருத்துவரிடம் கேட்க.



நீர் ஏற்கனவே தடுப்பூசி பெற்றிராவிட்டால், உடனடியாக உமது தடுப்பூசியைப் பெறுக. நீர் தடுப்பூசி பெற்றிருப்பின், உம்மையும் அடுத்தவர்களையும் பாதுகாக்க ஒரு கூட்டியைப் பெறுவதை உறுதி கொள்க.

**உம்மைப் பாதுகாத்துக் கொள்க. உமது சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்க. தடுப்பூசி பெறுக.**